செய்தி வெளியீடு எண்.314 நாள்.17.06.2009

## தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் புதிய கட்டட திறப்பு விழா

சென்னை கோயம்பேட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின், புதிய கட்டடடத்தினை, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் 19.6.2009 (வெள்ளிக்கிழமை) மாலை 5.30 மணிக்கு திறந்து வைத்து விழா பேருரையாற்ற உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாத் தலைமை ஏற்கவுள்ளார்கள்.

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் முன்னிலை வகிப்பார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.தா.சந்திரசேகரன், இ.ஆ.ப.(ஓ) அவர்கள் வரவேற்புரையாற்ற உள்ளார்கள்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிறார்கள்.

தென் சென்னை மக்களவை உறுப்பினர் திரு.ச.ராஜேந்திரன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ரங்கநாதன், சென்னை மாநகராட்சியின் 5வது மண்டலக் குழுத் தலைவர் திரு.எஸ்.சுரேஷ்பாபு, 65வது வார்டு உறுப்பினர் திரு.எஸ்.இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளார்கள்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப. (ஓ) அவர்கள் நன்றியுரையாற்ற உள்ளர்கள்.

இத்தேர்தல் ஆணையத்தின் புதிய கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு கட்டுமான கழகத்தின் பயன்பாட்டில் இருந்த நிலம் சுமார் 0.5 ஏக்கர் (50 மீட்டர் நீளம் x 41 மீட்டர் அகலம்) தமிழ்நாடு தேர்தல் ஆணையத்திற்கு உரிய வருவாய் நிலமாற்றத்தின்படி ஒப்படைக்கப்பட்டது. ரூ.2.13 கோடி செலவில் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தரைதளம் + மூன்று தளம் கட்டுவதற்கு வேண்டிய பைல் பவுண்டேஷன் போடப்பட்டுள்ளது. தற்போது தரைதளம் மற்றும் முதல்தளம் கட்டப்பட்டுள்ளது. கட்டட பரப்பளவு தரைதளம்–505 சதுர மீட்டர், முதல் தளம் – 505 சதுர மீட்டர் ஆக மொத்தம் 1010 சதுர மீட்டர். இக்கட்டடத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், செயலாளர், முதன்மை தேர்தல் அலுவலர், மாநகராட்சி மற்றும் ஊராட்சி, சட்ட அலுவலர், நிர்வாக அலுவலர், மக்கள் தொடர்பு அலுவலர், ஆலோசகர் ஆகியோர்களுக்கு தனித்தனி அறைகளும், மாநாட்டு அறை, நூலகக் கூடம், சாப்பாட்டுக் கூடம் மற்றும் ஊழியர்கள் பணிபுரியும் கூடங்கள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. கட்டடத்திற்கு வெளியே நான்கு வாகன நிறுத்துமிடங்கள்,

கட்டடத்தைச் சுற்றி சுற்றுச்சுவர்கள், கான்கிரீட் சாலைகள், புல்வெளிகள், தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உள் மற்றும் வெளி நுழைவு வாயில்களில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. அலுவலக முன்புற முகப்பு மற்றும் சுற்றுச்சுவர்களில் ஸ்தபதிகள் மூலம் அழகுப்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டடம் பொதுப்பணித்துறையால் வடிவமைத்து கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் கட்டும் பணி 31.12.2007 அன்று தொடங்கப்பட்டு 31.3.2009 அன்று முடிக்கப்பட்டது. இக்கட்டடம் ஒரு வருடம், மூன்று மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.